# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:


**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2021 ஒத்தோபரில் விரிவடைந்தன**

**நாட்டில் தயாரிப்பு நடவடிக்கைகள் வலுவாக மீட்சியடைவதனை எடுத்துக்காட்டி, தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 6.1 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2021 ஒத்தோபரில் 60.4 ஆக 7-மாத உயர்வொன்றினை எட்டியது.** தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணில் இவ்வதிகரிப்பிற்கு அனைத்து சுட்டெண்களிலும் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் காரணமாக அமைந்தது.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 60.4**

2021 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 6.1 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்திகளில் குறிப்பாக மாதகாலப்பகுதியில் உணவு மற்றும் குடிபானங்கள், மற்றும் புடவைகள் மற்றும் ஆடைகள் துறைகளின் தயாரிப்பு சார்ந்தவற்றில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. எதிர்வரவுள்ள பண்டிகைப் பருவகாலத்தின் கேள்வியினை இலக்காகக் கொண்டு 2021 ஒத்தோபரில் அதிகமான உள்நாட்டுக் கட்டளைகளை தாம் பெற்றுக்கொண்டதாக உணவு மற்றும் குடிபானத் துறை தயாரித்தலிலுள்ள பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்ட அதேவேளை ஆடைத் தயாரிப்பாளர்கள் ஆரோக்கியமிக்க ஏற்றுமதிக் கட்டளைகளைப் பெற்றுக்கொண்டனர். அதேவேளை, தொழில்நிலையும் நாட்டின் பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையால் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மாதகாலப்பகுதியில் அதிகரித்தது. எனினும், போதிய ஊழியர்கள் கிடைக்கப்பெறத்தக்கதாக இருந்திருப்பின் தமது உற்பத்தி அளவுகள் மேலும் உயர்வாக இருந்திருக்குமென புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறையைச் சேர்ந்த சில பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | செத் | ஒத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **54.3** | **60.4** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | | | |
| புதிய கட்டளைகள் | 55.5 | 61.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 49.0 | 58.2 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 53.5 | 57.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 49.0 | 56.6 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 65.0 | 67.3 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதேவேளை, புதிய கட்டளைகளில் அதிகரிப்பு மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்புமென்ற எதிர்பார்க்கை என்பவற்றுடன் கொள்வனவுகளின் இருப்பு அதிகரித்தது. வழங்கல் பக்க கரிசனைகளின் காரணமாக தாம் கொள்வனவுகளை அதிகரித்தனர் என உணவு மற்றும் குடிபானத் துறைகளிலுள்ள சில பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டினர். அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரம், 2021 ஒத்தோபரில் உயர்வான வேகத்தில் நீட்சியடைந்தது. உலகளாவிய பண்ட விலைகள் உயர்வடைவதனைப் பிரதான காரணமாகக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் செலவில் தொடர்ச்சியான அதிகரிப்பானது அனைத்து துணைத் துறைகளிலுமுள்ள அநேகமான பதிலிறுப்பாளர்களினால் முக்கிய கரிசனையொன்றாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைகளில் மேலும் மேம்பாடுகளை எதிர்பார்த்து, அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் உயர்வான மட்டங்களில் காணப்பட்டன.

***உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் 2021 செத்தெம்பரிலிருந்து 0.2 சுட்டெண் புள்ளிகளினால் அதிகரித்து 2021 ஒத்தோபரில் 54.3 இனை எட்டியது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஒத்தோபரில், இந்தியா, ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், சீனா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் உயர்வான வீதத்தில் அதிகரித்த அதேவேளை, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய வலய நாடுகளின் கொ.மு.சுட்டெண் மெதுவான வீதத்தில் அதிகரித்தது.

*மூலம்: மார்க்கிட்[1], 2021 நவெம்பர் 12இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் கொ.மு.சுட்டெண்ணானது, புதிய தொழில்கள், தொழில் நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் துணைச் சுட்டெண்களின் அதிகரிப்புக்கள் மூலம் துணையளிக்கப்பட்டு, 2021 ஒத்தோபரில் 57.9 இற்கு அதிகரித்தது.** 2021 மார்ச்சு தொடக்கம் அவதானிக்கப்பட்ட பணிகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்களில் இது வலுவான வளர்ச்சி வீதமாகும்.

பிரதானமாக, நிதியியல் பணிகள், போக்குவரத்து, கல்வி, காப்புறுதி, தொழில்சார் பணிகள், உண்மைச்சொத்து, தொலைத்தொடர்பு ஆகிய துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் ஒத்தோபரில் புதிய தொழில்கள் அதிகரித்தன.

தொழில் நடவடிக்கைகள் துணைச் சுட்டெண்ணானது அநேகமாக அனைத்துத் துறைகளுக்கிடையிலும் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் ஒத்தோபரில் சடுதியான அதிகரிப்பொன்றை அனுபவித்தது. அதற்கமைய, நிதியியல் பணிகள், வேறு தனிப்பட்ட நடவடிக்கைகள், போக்குவரத்து, கல்வி மற்றும் மொத்த அத்துடன் சில்லறை வியாபாரத் துணைத் துறைகளுடன் தொடர்புபட்ட வியாபார நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் அவதானிக்கப்பட்டன. எவ்வாறிருப்பினும், இறக்குமதி தொடர்புபட்ட பிரச்சனைகளுக்கு மத்தியில் அதிகரிக்கின்ற உள்ளீட்டுச் செலவுகள், வழங்கல் இடையூறுகள் மற்றும் தாமதங்கள் என்பவற்றினால் தமது வியாபார நடவடிக்கைகள் மீதான எதிர்மறையான விளைவுகள் பற்றி சில பதிலிறுப்பாளர்கள் பாதகமான எண்ணப்பாங்குடையவர்களாக இருந்தனர். மேலும், கப்பற்சரக்கு அனுப்புகின்ற கம்பனிகளைச் சேர்ந்த பதிலிறுப்பாளர்களும், இயலளவு மட்டுப்பாடுகள் அத்துடன் அதிகரிக்கின்ற கப்பற்பொருள் கட்டணங்கள் காரணமாக ஏற்றுமதி அளவுகள் மீதான பாதகமான தாக்கம் பற்றி தமது கரிசனைகளை வெளியிட்டனர்.

ஓய்வுபெறுதல்கள் மற்றும் தன்னார்வ பதவிவிலகல்கள் என்பன புதிய ஆட்சேர்ப்புக்களை விஞ்சியமையினால் தொழில்நிலை துணைச் சுட்டெண்ணும் எதிர்மறையான எல்லையிலேயே தொடர்ந்தும் காணப்பட்டது. அதேவேளை, பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் பின்னர் ஊழியர்களில் பெரும்பாலானோர் பணிக்குத் திரும்பியமையினால், 2021 மார்ச்சிலிருந்து முதற்தடவையாக நிலுவையிலுள்ள பணிகள் ஒத்தோபரில் குறைவடைந்தன.

| மாறி | செத் | ஒத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **52.2** | **57.9** | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 54.0 | 58.3 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 46.5 | 66.2 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 40.3 | 45.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 54.8 | 49.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் | 65.6 | 70.3 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

உலகளாவிய நோய்த்தொற்று தொடர்பிலான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை மற்றும் எதிர்வருகின்ற பண்டிகைப் பருவகாலத்தில் கேள்விப் பக்க அபிவிருத்திகள் மீதான சாதகமான எதிர்பார்க்கைகள் என்பவற்றைத் தொடர்ந்து அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகள் ஒத்தோபரில் அதிகரித்தன.

**பணிகள் கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 57.9**

2021 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 5.7 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2021 செத்தெம்பரில் 53.8 இலிருந்து 2021 ஒத்தோபரில் 55.6 ஆக உயர்வடைந்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளின் மேலும் விரிவடைதலினை சமிக்ஞைப்படுத்துகின்றது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா, இந்தியா, யப்பான் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஒத்தோபரில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டின.

*(மூலம்: மார்க்கிட்[1], நவெம்பர் 14, 2021 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.